


தினப்புயல்
PTN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




## ஹம்பாந்தோட்டை ரன்மினிதென்ன கனிஷ்ட வித்தியாலயத்திற்கு, டிஜிட்டல் கணினித் திரைகள் மற்றும் கணினி உபகரணங்கள் வழங்கிவைப்பு



சகல அரச பாடசாலைகளையும் சர்வதேச தரம் வாய்ந்த பாடசாலைகளாக அபிவிருத்தி செய்வதே ஐக்கிய மக்கள் சக்தியின் நோக்கமாகும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஒரு நாடாக அபிவிருத்தியடைய வேண்டுமானால், அறிவை மையமாகக் கொண்ட பொருளாதாரம் கட்டமைக்கப்பட வேண்டும் எனவும், இதற்கு கல்வி முறை சரியாக அமுலாக்கப்பட வேண்டும் எனவும், நாட்டின் கல்வித்துறையில் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தாமல் அனைவரும் ஆங்கில மொழிக் கல்வியை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். பிரபஞ்சம் நிகழ்ச்சித்திட்டத்தின் 26 ஆவது கட்டமாக ஹம்பாந்தோட்டை ரன்மினிதென்ன கனிஷ்ட வித்தியாலயத்தில் நேற்று (06) நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் உயிர் நாடியாக கருதப்படும் சிறுவர் தலைமுறையை அறிவு, திறமை மற்றும் வசதிகளுடன் பூரணப்படுத்துவது தார்மீக பொறுப்பு என்று நம்பி அதற்கான நிலையான நோக்கை முன்நோக்காக கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் எண்ணக்கருவுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்படும் சக்வல (பிரபஞ்சம்) வேலைத்திட்டத்தின் பாடசாலை வகுப்பறைகளுக்கான டிஜிடல் திறை மற்றும் கணினி உபகரனங்களை அன்பளிப்புச் செய்யும் பிரிவின் 26 ஆவது கட்டமாக 924,000.00 ரூபா பெறுமதியான வகுப்பறைகளுக்கான டிஜிட்டல் கணினித் திரைகள் மற்றும் கணினி உபகரணங்களும் இவ்வாறு ஹம்பாந்தோட்டை ரன்மினிதென்ன கனிஷ்ட வித்தியாலயத்திற்கு கையளிக்கப்பட்டது.

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவர்கள் இதற்கு முன்னர் இருபத்தி ஐந்து கட்டங்களில் பிரபஞ்சம் வேலைத்திட்டத்தின் ஊடாக 20,653,650.00 ரூபா பெறுமதியான வகுப்பறைகளுக்கான டிஜிடல் திரைகள் மற்றும் கணினி உபகரனங்களை அன்பளிப்பு செய்துள்ளார்.

மேலும் பிரபஞ்சம் வேலைத்திட்டத்துடன் இணைந்ததாக எழுபது பாடசாலைகளுக்கு 339,200,000.00 ரூபா பெறுமதியான 70 பாடசாலை பஸ் வண்டிகளும் இவ்வாறு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. உலகில் ஏனைய நாடுகளில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் வரையில் நாம் உள்ளக ரீதியாக மாவீரர்களாகவே எண்ணிக்கொண்டாலும், நாடு உலகிற்கு திறந்து விடப்பட்டு சர்வதேச போட்டித் தன்மைக்குள் பிரவேசிப்போமேயானால் நாம் மிகவும் கீழ்நிலையில் தான் இருப்போம் எனவும் எதிர்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நமது நாட்டின் பாடசாலைகளால் மின்கட்டணத்தைக் கூட செலுத்த முடியாத நிலையில் தலைநகரின் கண்ணாடி அறைகளுக்குள்ளேயே இருந்து கொண்டு நாட்டின் தலைவர்கள் டிஜிட்டல் புரட்சி குறித்து பேசும்போது கிராமப்புற பாடசாலைகளில் IT ஆசிரியர்கள் இல்லை என்றும், சில ஆசிரியர்கள் 2 பாடசாலைகளில் IT கற்பிக்கும் நிலை காணப்படுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ரன்மினிதென்ன வித்தியாலயத்தில் நேற்று ஐக்கிய மக்கள் சக்தியினால் முன்னெடுக்கப்பட்ட பிரபஞ்சம் வேலைத்திட்டத்தின் போது மின்சார சபையினர் மின்சாரத்தை துண்டிக்க வந்தபோது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் குறித்த பாடசாலையின் நிலுவை மின்கட்டணமும் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பண்டிகை காலத்தை முன்னிட்டு விசேட போக்குவரத்து வசதி

எதிர்வரும் பண்டிகை காலத்தை முன்னிட்டு பயணிகளுக்கு போக்குவரத்துவசதிகளைஏற்படுத்திக்கொடுப்பதற்குவிசேடவேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிராண்டா இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு மேலும் கருத்து தெரிவித்த பணிப்பாளர் நாயகம், நாளை முதல் எதிர்வரும் 18ஆம் திகதி வரை இடம்பெறும் இந்த வேலைத்திட்டத்திற்காக 7,000 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

## சீன போர் கப்பல்களால் பதற்றம்



சீனா தைவானை தனது நாட்டின் ஒரு பகுதியாக கருதுகிறது. தைவான் இதற்கு தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. தைவானுக்கு அமெரிக்கா உதவி வருகிறது. இதனால் தைவானை அச்சுறுத்த சீனா தொடர்ந்து போர் பயிற்சிகளை எல்லையில் நடத்தி வருகிறது.

இந்த நிலையில் சீனாவின் ஒரு நீர்மூழ்கி எதிர்ப்பு ஹெலிகொப்டர், 3 போர்க்கப்பல்கள் தைவானில் உள்ள ஒரு தீவை சுற்றி கண்டறியப்பட்டதாக தைவானின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. லொஸ் ஏஞ்சல்சில் அமெரிக்க பாராளுமன்ற சபாநாயகர் கெவின் மெக்கார்த்தியை தைவான் அதிபர் சாய் இங்-வென் சந்தித்த பின்னர் இந்த சம்பவம் நடந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சீனாவின் இந்த அத்துமீறலை தைவான் அரசு கண்டித்துள்ளது.

மேலும் ஆயுதப்படைகள் நிலைமையை தீவிரமாக கண்காணிப்பதாகவும் விமானங்கள், கடற்படை கப்பல்கள் ரோந்து சுற்றி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது.

## வேகப்பந்து வீச்சாளர் ரீஸ் டாப்லி விலகல்



16-வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் இன்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ்-பெங்களூரு ரோயல் சேலஞ்சர்ஸ் அணிகள் மோதின. இதில், 81 ரன்கள் வித்தியாசத்தில் பெங்களூரு அணியை வீழ்த்தி கொல்கத்தா அணி வெற்றி பெற்றது.

இதற்கிடையே, ஐபிஎல் தொடரில் இருந்து பெங்களூரு அணியின் வேகப்பந்து வீச்சாளர் ரீஸ் டாப்லி விலகியுள்ளார். மும்பைக்கு எதிரான போட்டியில் பெங்களூரு வீரர் ரீஸ் டாப்லி காயம் அடைந்தார். இதில் தோள்பட்டை பகுதியில் டாப்லிக்கு காயம் ஏற்பட்டது.

இந்நிலையில், போட்டியில் இருந்து பாதியிலேயே டாப்லி வெளியேறினார் . காயத்தின் பாதிப்பு அதிகமாக இருந்தால் டாப்லி நடப்பு ஐபிஎல் தொடரில் இருந்து அவர் விலகியுள்ளார். ஏற்கனவே பெங்களூரு அணியின் வில் ஜோக்ஸ், ரஜத் படிதார் ஆகியோர் தொடரில் இருந்து விலகியது குறிப்பிடத்தக்கது.

## அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

ஜூன் 1ஆம் திகதி முதல் சில பிளாஸ்டிக் பொருட்களை இறக்குமதி செய்ய தடை விதித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் தட்டுகள், கோப்பைகள், கரண்டிகள் போன்ற பல பொருட்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## தவறான அறிக்கையிடலால் பொது மக்கள் ஏமாற்றமடையவேண்டாம் – மத்திய வங்கி



அண்மையில் நிகழ்ந்த ஊடக சந்திப்பொன்றினைத் தொடர்ந்து மத்திய வங்கியின் ஆளுநரினால் வெளியிடப்பட்ட கருத்துக்கள் தொடர்பிலான தவறான அறிக்கையிடலை இலங்கை மத்திய வங்கி தெளிவுபடுத்த விரும்புகின்றது.

அத்தகைய ஊடக அறிக்கைகள் 'பொருளாதாரத்தில் கடினமானதொரு காலகட்டத்தினை ஆளுநர் எதிர்பார்க்கின்றார்' எனக் குறிப்பிட்டிருந்தன. எதிர்பார்க்கப்படுகின்ற சீர்திருத்தங்கள் தாமதமானாலோ அல்லதுதடம்புரள்வினை எதிர்கொண்டாலோ எதிர்வருகின்ற காலப்பகுதியில் பொருளாதாரம் எதிர்கொள்ளக்கூடிய சவால்கள் குறித்த கலந்துரையாடலின் பின்னணியில் ஆளுநரினால் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களிற்கு ஒட்டுமொத்தமாகத் தவறான பொருட்கோடலாக இது காணப்படுகின்றது.

2022இல் காணப்பட்ட முன்னெப்பொழுதுமில்லாத சமூக - பொருளாதார பதற்றங்களுடன் ஒப்பிடுகையில் அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட கடினமானதும் வேதனையளிக்கின்றதுமான கொள்கைசார் வழிமுறைகள் பொருளாதார நிலைமைகளை உறுதிப்படுத்துவதற்குத் துணைபுரிந்துள்ளதாக ஆளுநர் தெரிவித்தார்.

இச்சீர்திருத்தங்கள் அண்மித்த காலத்தில் மக்களுக்கும் வியாபாரங்களுக்கும் இன்னல்களை ஏற்படுத்துகின்ற சீராக்கச்செலவுகளைத் தோற்றுவித்துள்ளபோதிலும், உறுதிப்பாட்டினை மீட்டெடுப்பதற்கு அவை அவசியமாயிருந்ததுடன் எதிர்வருகின்ற காலப்பகுதியில் மக்களுக்கும் வியாபாரங்களுக்கும் நன்மைகளைப் பெற்றுத்தரும்.

இருப்பினும், வளர்ச்சியை மேம்படுத்துகின்ற சீர்திருத்தங்களை உள்ளடக்கிய எதிர்பார்க்கப்படுகின்ற பொருளாதாரச் சீராக்கச் செயற்றிட்டத்திலிருந்து ஏதேனும் தாமதம் அல்லது விலகல் ஏற்படும் பட்சத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற பொருளாதார மீட்சிக்குக் குறிப்பிடத்தக்க கீழ்நோக்கிய இடர்நேர்வுகளை ஏற்படுத்தும் வேளையில் பொருளாதார தோற்றப்பாட்டினை மெதுவடையச்செய்யக்கூடும் என்ற கருத்தினையே ஆளுநர் மீள்வலியுறுத்தினார்.

எனவே, இலங்கைப் பொருளாதாரமானது வரலாற்றில் எதிர்கொண்டிருந்த மிகவும் மோசமான நெருக்கடியிலிருந்து பொருளாதார மீட்சியடைகின்ற இம்முக்கியமான தருணத்தில், வேண்டுமென்றோ அல்லது வேறுவிதமாகவோ வெளியிடப்படும் தவறான அறிக்கையிடலை எடுத்துரைக்கின்ற ஊடக அறிக்கைகளினால் பொதுமக்கள் ஏமாற்றமடைய வேண்டாமென மத்திய வங்கி பொதுமக்களை வலியுறுத்த விரும்புகின்றது.

## மட்டக்களப்பு புளியந்தீவு மரியாள் பேராலய திருப்பலி பூஜை நிகழ்வுகள்



மட்டக்களப்பு மாவட்டத்தில் கிறிஸ்தவ மக்களின் தவக்காலத்தை முன்னிட்டு வியாழனை சிறப்பிக்கும் வகையில் மாவட்டத்தில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் இன்று மாலை விசேட வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு புளியந்தீவு மரியாள் பேராலயத்திலும் ஆலய பங்குத்தந்தை ஜீவராஜ் தலைமையில் இன்றைய வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டது.

புளியந்தீவு மரியாள் பேராலய மட்டு மறை மாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்கள் கலந்துகொண்டு இந்த விசேட பெரிய வியாழன் திருப்பலி பூஜைகள் ஒப்புக்கொடுத்தார்.

பெரிய வியாழன் வழிபாடுகளில் இறை வழிபாடு, திருப்பாதம் கழுவுதல், சடங்கு நற்கருணை வழிபாடுகள் என்பன மறை மாவட்ட ஆயர் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்த விசேட வழிபாட்டு நிகழ்வுகளில் பெருந்தொகையான கிறிஸ்தவ அடியார்கள் கலந்துகொண்டனர். தவக்கால கிறிஸ்தவ பெருமக்கள் பெரிய வியாழன் வழிபாடுகளில் சகல கிறிஸ்தவ ஆலயங்களிலும் இடம்பெற்றது.

கிறிஸ்தவ பெருமக்களின் தவக்காலத்தைக் குறிக்கும் விசேட நாளான பெரிய வெள்ளி இன்று காலை மட்டக்களப்பு மரியாள் தேவாலயத்திலும் ஆண்டவர் இயேசு கல்வாரி மலையில் சிலுவை சுமந்ததை நினைவு கூறும் திருச்சிலுவை பாதை சுமக்கும் வழிபாடானது ஆலயத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு, நகரின் பிரதான வீதிகளூடாக சென்று மீண்டும் ஆலயத்தை வந்தடைந்தது. இதன்போது ஆலயத்தின் பங்கு பிரிவினரால் பெரிய வெள்ளி குறிக்கும் வழிபாடுகள் இங்கு இடம்பெற்றது. ஆலயத்தின் பங்குத்தந்தை அவர்களால் பெரிய வெள்ளி சிறப்பு பற்றி கருத்துரைகளும் வழங்கப்பட்டது.

## முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் கப்ராலுக்கு எதிரான முறைப்பாடு நிராகரிப்பு



மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ராலுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாட்டினை நிராகரிப்பதாக கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று (06) தீர்ப்பளித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக கடமையாற்றிய போது அரசாங்க நிதியை துஷ்பிரயோகம் செய்ததாக குறித்த தனிப்பட்ட முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அஜித் நிவார்ட் கப்ராலின் சட்டத்தரணிகள் முன்வைத்த ஆரம்ப ஆட்சேபனைகளை ஏற்று கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனாவல இந்தத் தீர்மானத்தை வழங்கியுள்ளார்.

தீர்ப்பை அறிவித்த நீதிபதி, குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது குற்றஞ்சாட்டுவதற்கு போதுமான உண்மைகளை முன்வைக்க வாதி தவறிவிட்டதாக குறிப்பிட்டார்.

## திருமணத்தை நிறுத்திய ரூபெர்ட் முர்டாச்



சர்வதேச ஊடகத்துறையின் ஜாம்பவானாக ரூபெர்ட் முர்டாச் அமெரிக்கா, இங்கிலாந்து உள்பட பல நாடுகளில் சுமார் 120க்கும் அதிகமான பத்திரிகைகளை வெற்றிகரமாக நடத்தி வருகிறார்.

ஏற்கனவே 4 முறை திருமணமாகி 4 மனைவிகளையும் விவாகரத்து செய்த ரூபெர்ட் முர்டாச், 92 வயதில் 5வது முறையாக திருமணம் செய்து கொள்ள உள்ளதாக கடந்த மாதம் அறிவித்தார்.

கணவரை இழந்த மூத்த பெண் பத்திரிகையாளரும், மொடல் அழகியுமான 66 வயதான ஆன் லெஸ்லி ஸ்மித்துடன் காதல் வயப்பட்டதாகவும், வருகிற கோடை காலத்தில் அவரை திருமணம் செய்து கொள்ள இருப்பதாகவும் முர்டாச் கூறினார்.

மேலும் இது தனது கடைசி காதலாக இருக்கும் என்றும் அவர் கூறியிருந்தார். இந்த நிலையில் ரூபெர்ட் முர்டாச் – ஆன் லெஸ்லி ஸ்மித் தங்களின் திருமணத்தை நிறுத்திவிட்டதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கிறிஸ்தவத்தை பரப்புவதற்கான ஆன் லெஸ்லி ஸ்மித்தின் பிரசங்கத்தால் ரூபெர்ட் முர்டாச் பெரிதும் சங்கடத்துக்கு ஆளானதாகவும், இதனால் ஏற்பட்ட மனகசப்பால் ரூபெர்ட் முர்டாச் தனது காதலை முறித்து கொண்டதாகவும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறியதாக செய்தி வெளியிடப்பட்டுள்ளன.

எனினும் இந்த தகவல்கள் ரூபெர்ட் முர்டாச் - ஆன் லெஸ்லி ஸ்மித்தால் உறுதிப்படுத்தப்படவில்லை.

## தஜிகிஸ்தானில் நிலநடுக்கம்

தெற்கு திபெத் நாட்டில் உள்ள ஜிஜாங் பகுதியில் நேற்று நள்ளிரவு திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவு கோலில் இது 4.6 ஆக பதிவாகி உள்ளதாக தேசிய நிலநடுக்கவியல் மையம் தெரிவித்து உள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் வீடுகள், கட்டிடங்கள் குலுங்கின. இதனால் பயந்து போன பொது மக்கள் வீடுகளை விட்டு வெளியே ஓடி வந்து வீதிகளில் தஞ்சம் அடைந்தனர். இந்த நிலநடுக்கத்தால் உயிர்சேதமோ பொருட்சேதமோ எதுவும் ஏற்படவில்லை. இதேபோல தஜிகிஸ்தான் நாட்டிலும் இன்று அதிகாலை 3.18 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. பூமிக்கடியில் 150 கிலோ மீட்டர் ஆழத்தில் இது உருவானது. ரிக்டர் அளவு கோலில் இது 4.1 ஆக பதிவாகி இருந்தது. இதனால் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

## பொலிஸ் மா அதிபரின் சேவை நீடிப்பு

பொலிஸ் மா அதிபர் சி.டி விக்ரமரத்னவின் சேவை நீடிப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி வெளியிட்டுள்ளார்.

இந்த சேவை நீடிப்பு மார்ச் 26 ஆம் திகதி தொடக்கம் மூன்று மாதங்களுக்கு அமுலில் இருக்கும் என குறித்த வர்த்தமானி அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்பில் அதிரடி நடவடிக்கை

26 எரிபொருள் நிரப்பு நிலையங்களின் சேவைகளை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக லங்கா IOC நிறுவனம் தெரிவித்துள்ளது. QR ஒதுக்கீடுகளை தொடர்ந்து கடைபிடிக்கத் தவறியதன் காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.